## சுருக்கம்

செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை – 2007–2008 பகுதி–II திட்டத்தின் கீழ் புதியதாக 5 டெம்போ டிராக்ஸ் ஜுடோ வாகனங்கள் வாங்குதல் – செலவுத் தொகை ரூ.20.00.000/– ஒப்பளித்தல் –ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர் 5)த் துறை

அரசாணை (நிலை) எண்.208 நாள் 31.05.2007

ஆணை:

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கீழ் உள்ள நாமக்கல், தூத்துக்குடி, சேலம், சென்னை மற்றும் தேனி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலக பயன்பாட்டிற்காக 2007–2008–ஆம் ஆண்டின் பகுதி–II திட்டத்தின் கீழ் தற்போதுள்ள வாகனங்களை கழிவு செய்துவிட்டு 5 டேம்போ டிராக்ஸ் (ஜுடோ) வாகனங்கள் வாங்கி வழங்கலாமென அரசு முடிவு செய்துள்ளது.

2. அதன்படி நாமக்கல், தூத்துக்குடி, சேலம், சென்னை மற்றும் தேனி ஆகிய 5 மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு தற்போதுள்ள வாகனங்களை கழிவு செய்து விட்டு செய்தியாளர் வாகனங்கள் டெம்போ டிராவலர் (ஜுடோ) வாகனங்கள் வாங்குவதற்காக ரூ.20,00,000/– (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) 2007–2008 ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டத்தின் கீழ் நிதி ஒப்பளிக்கப்படுகிறது.

3. மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவு தொகை கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:–

> "2220 – செய்தி விளம்பரம் – 60 ஏனையவை – 106 நேரிட விளம்பரம் – II மாநிலத் திட்டம். JA ஒருங்கிணைந்த நேரிட விளம்பரத் திட்டம் – 21 மோட்டார் வண்டிகள் – 01. வாங்குதல் (த.தொ.கு. 2220–60– JA –22110)"

4. தமிழ்நாடு நிதியியல் விதித் தொகுப்பு தொகுதி–1–இல் விதி 99–ன் கீழ் மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகை ரூ.20,00,000/– (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகந்ததிலிருந்து முன்பணமாகப் பெற்று வழங்குமாறு தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறையின் கணக்கு அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இதற்காக அரசு கடிதம் எண்.136452/ சம்பளம்/1/80–1 நிதித்துறை, நாள் 31.1.81–இல் உள்ள விதிமுறைகள் ஒரு சிறப்பு நிகழ்வாக தளர்த்தப்படுகிறது.

//2//

5. இந்த ஆணையை வெளியிடுவதற்கு நிதித்துறை தனது அலுவல் சார்பற்ற எண்.31602/நிதி தவ(ம)செ / 2007, நாள் 30.5.2007–இன் மூலம் ஒத்திசைவு அளித்துள்ளது.

(ஆளுநரின் ஆணைப்படி)

து. இராசேந்திரன்,
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
கணக்கு அலுவலர், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை, சென்னை–9.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், சென்னை–9.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், சென்னை–9.(பட்டியலுடன்)
மாநிலக் கணக்குத் துறைத் தலைவர், சென்னை 9/18.
நகல்
நிதி (செ(ம)சு/வ.செ.1)த் துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்/பிரிவு அலுவலர்